<u>முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்</u>

பி.வா.சா. – 1 நடராஜன் OS.No.17/2022 நாள் :09.12.2024

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வாதிகள் 1 முதல் 4 வரையானவர்கள் வாதிகள். மற்றும் 5,6 வாதிகள் என் மற்றொரு மகள் மாலதியின் குழந்தைகள் என்றாலும், 7 வது வாதி மாலதியின் கணவர் என்றாலும், மாலதி இறந்துவிட்டார் என்றாலும் சரிதான். 1983 ஆம் ஆண்டு நான் அரசுப்பணியில் சேர்ந்தேன். அப்பொழுது எனது சம்பளம் ரூ.380. நான் 30.11.2007 இல் பணிஓய்வு பெற்றேன். என்னுடைய பென்சன் புத்தகத்தில் வாதிகளின் தாயார் மணிமேகலையின் பெயரை மனைவி என குறிப்பிட்டுள்ளேன். 07.12.1998 ஆம் தேதி இரும்புலிக்குறிச்சி கிராமத்தில் உள்ள சர்வே எண்.209/3 சொத்தை விற்றுவிட்டேன் என்றாலும், 21.12.1998 ஆம் தேதி வழக்கில் கண்ட A அயிட்ட சொத்தை கிரையம் பெற்றேன் என்றாலும் சரிதான். நான் சொத்தை கிரையம் கொடுத்ததற்கும், A அயிட்ட சொத்தை கிரையம் வாங்கியதற்கும் 15 நாள்தான் இடைவெளி என்றால் சரிதான். இரும்புலிக்குறிச்சி சொத்தை விற்றுதான் A அயிட்ட சொத்தை கிரையம் வாங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தை கிரையம் விற்ற வகையிலும், எனது மனைவி மணிமேகலை நகையை விற்று வந்த பணத்தின் அடிப்படையிலும், A அயிட்ட சொத்தை நான் கிரையம் பெற்றிருக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் எனக்கு சட்டப்படியான வாரிசுகள் என்பதால் அவர்களுக்கு வழக்கு சொத்துக்களில் பாகம் உண்டு என்றால் சரியல்ல. 07.04.2022 ஆம் தேதி 2 ஆம் பிரதிவாதியிடம் விற்பனை செய்துள்ள A அயிட்ட சொத்து செல்லாது என்றால் சரியல்ல. வாதிகள் சட்டப்படி வாரிசுகள் என்பதால் வழக்கு சொத்தில் அவர்களுக்கு 5/6 பாகம்

உரிமை உண்டு என்றால் சரியல்ல. வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒப்பம்.திருமதி.T.மலர்வாலன்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.